**தோட்டக்கலை அதிகாரிகள் மீது நடவடிக்கை கோரி விவசாயிகள் மனு: ஆட்சியருக்கு நோட்டீஸ்**

First Published : 03 Aug 2010 12:36:16 PM IST

மதுரை, ஆக. 2: சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் அருகே துல்லிய பண்ணைத் திட்டத்துக்கு தொழில் நுட்ப உதவிகளை அளிக்கத் தவறிய தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்திய மனு மீது மாவட்ட ஆட்சியர் மற்றும் அதிகாரிகள் பதிலளிக்குமாறு உயர் நீதிமன்ற மதுரைக் கிளை திங்கள்கிழமை உத்தரவிட்டது.

இதுகுறித்து திருப்பத்தூர் அருகே உள்ள ஏ.வடக்கூரைச் சேர்ந்த மீராமைதீன், வைரவ பட்டர் ஆகியோர் தாக்கல் செய்த மனு:

22 விவசாயிகளைச் சேர்த்து ஒரு குழு அமைக்குமாறும், அவர்களது தோட்டங்களில் துல்லிய பண்ணைத் திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான தொழில் நுட்பங்களையும், பயிர் செய்யத் தேவையான நாற்றுகளையும் வழங்கி, தாங்களே நேரடியாக ஆலோசனைகளை வழங்கி நிதி உதவி ஏற்பாடு செய்வதாக தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் உறுதி கூறினர். துல்லிய பண்ணை என்றால் என்ன என்றே தெரியாத நாங்கள் ஒரு குழுவை அமைத்து, அதற்கு மல்லிகை துல்லிய பண்ணைத் தோட்ட விவசாயிகள் சங்கம் எனப் பெயரிட்டோம். எங்களுக்கு பஞ்சாப் நேஷனல் வங்கியில் இருந்து தலா ரூ.47,500 மற்றும் ரூ.45,000 கடன் வழங்கினர். இதில் ரூ.45,000-ஐ சொட்டுநீர் பாசன அமைப்பை ஏற்படுத்த ஏ.ஜி.எஸ். இரிகேஷன் நிறுவனத்துக்கு காசோலையை வழங்கினர். தோட்டக்கலைத் துறையினர் இலவசமாகத் திசு வாழைக் கன்றுகளைத் தருவதாகக் கூறிவிட்டு பின்னர், ரூபாய் ஆயிரம் வாங்கிக்கொண்டு, 1,750 வாழைக் கன்றுகளை அளித்தனர்.

இவற்றை நாங்கள் தோட்டத்தில் பயிரிட்ட பின்னர் எந்த அதிகாரியும் வந்து பார்வையிடவோ, ஆலோசனை வழங்கவோ இல்லை. இதனால் நாங்கள் பெரியஅளவில் இழப்பைச் சந்தித்துள்ளோம். இதுகுறித்து, ஆட்சியரிடம் புகார் செய்தும் நடவடிக்கை இல்லை.

இந் நிலையில், வங்கிக் கடனைச் செலுத்த இயலவில்லை. மானியத் தொகையை கடனில் வரவு வைக்கவும், அதுவரை கடனைச் செலுத்த அவகாசம் வழங்கவும் வங்கிக்கு உத்தரவிட வேண்டும். தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

இதை விசாரித்த நீதிபதி எம்.ஜெயபால், தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர், மாவட்ட ஆட்சியர், வங்கிக் கிளை மேலாளர் ஆகியோருக்கு பதிலளிக்குமாறு நோட்டீஸ் அனுப்ப நீதிபதி உத்தரவிட்டார்.

**சொட்டு நீர் பாசனம் அமைக்க 65 சத மானியம்**

First Published : 03 Aug 2010 01:12:06 PM IST

ஆலங்குடி, ஆக. 2: கரும்பு சாகுபடியில் சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க 65 சதம் மானியம் வழங்கப்படுகிறது.

இதுதொடர்பாக வம்பன் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் ப. சின்னையன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்டத்தில் தெற்கு வெள்ளாறு உப வடிநிலப் பகுதியில் துல்லிய பண்ணையம் மூலம் கரும்பு சாகுபடி செய்ய நீர் வள, நில வளத் திட்டத்தின் மூலம் கருவிகள், உரங்கள் வழங்கப்படுகின்றன.

இதில் சொட்டு நீர்ப் பாசனம் அமைப்பதற்கான கருவியின் விலையில் 65 சதம் மானியமும், ஹெக்டேருக்கு ரூ. 22,500 மதிப்பிலான இடு பொருள்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இந்தத் திட்டத்தை விவசாயிகள் பின்பற்றி கரும்பு சாகுபடி மேற்கொண்டால் 40 சதம் தண்ணீரும், 30 சதம் மின்சாரமும் சேமிக்கப்படும்.

இதுகுறித்தும் மேலும் விவரங்களுக்கு வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தைத் தொடர்பு கொள்ளலாம் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கொள்முதல் பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்**

First Published : 04 Aug 2010 08:56:31 AM IST

சிதம்பரம், ஆக. 3: சிதம்பரத்தில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கொள்முதல் பணியாளர்கள் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

÷சிதம்பரம் அண்ணாமலைநகர் நவீன அரிசி ஆலை முன்பு ஏஐடியுசி சங்கத்தைச் சேர்ந்த கொள்முதல் பணியாளர்கள், தங்களை நிரந்தரப்படுத்தும் 12(3) ஒப்பந்தத்தை ரத்து செய்யக்கூடாது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் மாவட்டத் தலைவர் ஜி.தேவநாதன் தலைமையில் 100-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

**கொடைக்கானலில் பொய்த்துப்போன பருவமழை: பேரிக்காய் விளைச்சல் குறைவால் விவசாயிகள் பாதிப்பு**

First Published : 04 Aug 2010 02:20:37 AM IST



கொடைக்கானல்: கொடைக்கானலில் பருவமழை பொய்த்ததால் பேரிக்காய் விளைச்சல் குறைவாக உள்ளது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொடைக்கானல் சுற்றுலாத் தலம் மட்டுமல்ல. இங்கு பல்வேறு காய்கறிகள், பழ வகைகள் விளைகின்றன. இதில் பேரிக்காய் முக்கியப் பங்காகும்.

பேரிக்காய் விளைவதற்கு அதிக மழை தேவை. எவ்வளவு மழை பெய்தாலும் அவற்றை தாங்கிக் கொள்ளும் தன்மையும் அதிகமாக விளைச்சலும் இருக்கும். பேரிக்காயில் தண்ணீர் பேரி, முள்பேரி, நாட்டுப்பேரி, சீனி பேரி, ஊட்டி பேரி ஆகியன உள்ளன.

பேரிக்காயானது கொடைக்கானல் பகுதிகளான அட்டுவம்பட்டி ,வில்பட்டி, பள்ளங்கி, கோம்பை, மாட்டுப்பட்டி, நாயுடுபுரம், சின்னப்பள்ளம், பெரும்பள்ளம், செண்பகனூர், பிரகாசபுரம், சகாயபுரம், பாம்பார்புரம், அப்சர்வேட்டரி, வட்டக்கானல், பேத்துப்பாறை உள்பட பல்வேறு பகுதிகளில் பேரிக்காய் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் ஆயிரக்கணக்கான ஏக்கர் மரங்களில் பேரிக்காய்கள் விளைவிக்கப்பட்டன. இவற்றை எடுப்பதற்கு கொடைக்கானலில் 4 மாதங்களாக பல இடங்களிலிருந்து நூற்றுக்கணக்கான கூலியாட்கள் வருவது வழக்கம். இதனால் வேலை வாய்ப்பும் கிடைத்தது.

பேரிக்காய் பருவகாலம் ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் மாதங்கள் ஆகும். சீசன் காலங்களில் ஓரளவு மழையும், அதன் பின் ஜூன், ஜூலையில் நல்ல பருவமழையும் பெய்தால் விளைச்சல் அதிகமாக இருக்கும்.

10 ஆண்டுகளுக்கு முன் கொடைக்கானலில் பேரிக்காய் ஒரு நாளைக்கு 50 லாரி முதல் 60 லாரிகள் வரை செல்லும். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக பருவமழை பொய்த்து வருவதால் ஒரு நாளைக்கு 15 முதல் 20 லாரிகளில் மட்டுமே பேரிக்காய்கள் செல்கின்றன.

கொடைக்கானலில் விளையும் பேரிக்காய் தமிழகம் மட்டுமின்றி கேரளம், கர்நாடகம், ஆந்திரம் போன்ற வெளிமாநிலங்களுக்கும் செல்கிறது. கடந்த ஜூன் மாதத்தில் ஒரு சிப்பம் விலை (45 கிலோ) ரூ.600 முதல் ரூ.750 வரை விற்கப்பட்டது. தற்போது ஒரு சிப்பம் ரூ.300 முதல் ரூ.350 வரை விற்கப்படுகிறது.

கொடைக்கானலில் உள்ள பேரி மரங்கள் கடந்த 60 முதல் 75 ஆண்டுகளுக்கு முன் வைக்கப்பட்ட மரங்களிலிருந்துதான் உற்பத்தி ஆகிறது. ஆனால் தற்போது பேரி மர நாற்றுகளை வைப்பதற்கு கொடைக்கானலில் விவசாய நிலங்கள் இல்லை. குறைந்த அளவு நிலம் உள்ள விவசாயிகளும் பேரி நாற்றுகளை வைப்பதற்கு விருப்பமில்லாமல் உள்ளனர். இதனால் கொடைக்கானலில் பேரிக்காய் இன்னும் 5 ஆண்டுகளில் முழுமையாக இல்லாத சூழ்நிலை உருவாகும் எனத் தெரிகிறது.

எனவே, கொடைக்கானலில் உள்ள தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் மற்றும் மாவட்ட நிர்வாகத்தினர் இது குறித்து விவசாயிகளுக்கு பேரி நாற்றுகள் வழங்கி உற்பத்தியைப் பெருக்க வேண்டும். இவற்றைப் பராமரிப்பது சுலபம். செலவும் குறைவு.

இதன் உற்பத்தியை பெருக்கினால் பேரிக்காயிலிருந்து ஜாம் தயாரிக்கலாம். இதனால் வேலைவாய்ப்பு உருவாகும். பேரிக்காய் சிறந்த மருந்தாகவும் பயன்படுகிறது. எளிதில் ஜீரணம் ஆகக் கூடிய சக்தி பேரிக்காய்க்கு உண்டு. இவற்றை கேரள மக்கள் அதிகமாக விரும்புவர். இவை கேரளத்துக்குத்தான் அதிகமாக கொண்டு செல்லப்படுகிறது.

இது குறித்து செண்பகனூர் விவசாயி நாகராஜன் கூறியது:

கொடைக்கானலில் சில ஆண்டுகளுக்கு முன் அதிகமான பேரிக்காய் விளையும். நல்ல மழை பெய்யும். மழைக் காலங்களில்கூட நாங்கள் பேரிக்காய் எடுப்போம். பல இடங்களிலிருந்து வேலையாட்கள் வருவர். இதனால் வேலைவாய்ப்பு இருந்தது. ஆனால் சில ஆண்டுகளாக போதுமான மழை இல்லை. பேரிக்காய் விளைச்சலும் இல்லை. விளைநிலங்கள் அழிக்கப்பட்டு வருவதால் பேரி மரங்கள் அழிந்து வருகின்றன.

பேரி நாற்றுகளை விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறையினர் கொடுத்து அவற்றின் உற்பத்தியைப் பெருக்க வழி செய்ய வேண்டும். அவ்வாறு இல்லையெனில் வருங்காலங்களில் கொடைக்கானலில் மருந்துக்குக்கூட பேரிக்காய் இருக்காது எனத் தெரிகிறது என்றார்.

பேரிக்காய்களை தரம் பிரித்து மார்க்கெட்டுக்கு அனுப்பும் விவசாயிகள்.

**நீர்வள, நிலவள திட்டப் பணிகள் நெதர்லாந்து வேளாண் ஆய்வாளர்கள் ஆய்வு**

First Published : 04 Aug 2010 09:05:17 AM IST

விழுப்புரம், ஆக. 3: விழுப்புரம் மாவட்டத்தில் நீர்வள, நிலவளத் திட்டப் பணிகளையும், அதில் செம்மைநெல் சாகுபடியையும் நெதர்லாந்து நாட்டின் வேளாண் ஆராய்ச்சியாளர்கள் பார்வையிட்டனர்.

÷ஆராய்ச்சியாளர்கள் டொமினிக் க்ளோவர், எஸ்ரா பெர்க் ஆகியோர் ஆலம்பூண்டி, தென்பிலாய், கொணக்கம்பட்டு, வல்லம், செந்தூர், விக்கிரவாண்டி ஆகிய பகுதிகளுக்குச் சென்று திட்டப் பணிகளை பார்வையிட்டனர்.

÷விவசாயிகளிடம் திட்டப்பணிகள், அதன் பயன்கள் பற்றியும், அவர்களின் எதிர்பார்ப்பு, நிதிச் செலவு உள்ளிட்ட விவரங்களை கேட்டறிந்தனர்.
÷பின்னர் மாவட்ட ஆட்சியர் ஆர்.பழனிச்சாமியை சந்தித்து மேலும் விவரங்களை கேட்டறிந்தனர். மாவட்டத்தில் 69 ஆயிரம் ஹெக்டேர் மொத்த விவசாய நிலப்பரப்பில் 1.7 ஆயிரம் ஹெக்டேரில் தற்பொது செம்மை நெல் சாகுபடி செய்யப்படுகிறது.
அடுத்துவரும் நெல்சாகுபடி பருவகாலத்தில் இன்னும் அதிக அளவிலான நிலப்பரப்பில் பயிரிட விவசாயிகள் தயாராக உள்ளனர் என்று ஆட்சியர் தெரிவித்தார்.
÷இந்த கலந்துரையாடலின்போது திண்டிவனம் விதை ஆராய்ச்சி மைய பேராசிரியர் ராமமூர்த்தி, வேளாண்மை இணை இயக்குநர் கே.அரங்கநாதன், நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சக்கரவர்த்தி, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக உதவி பேராசிரியர் எஸ்.அன்புமணி ஆகியோர் உடனிருந்தனர்.

தினமலர்

**பட்டம் மாறி தர்பூசணி சாகுபடி, நோய் தாக்குதலால் பாதிப்பு; விவசாயிகளுக்கு நஷ்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2010,03:21 IST

மரக்காணம்:முருக்கேரி பகுதியில் பட்டம் மாறி பயிர் செய்த 100 ஏக்கர் தர்பூசணி பயிர் முடக்கு மற்றும் வைரஸ் நோயால் பாதிக்கப் பட்டுள்ளது.விழுப்புரம் மாவட்டத் தில் அதிகளவு தர்பூசணி விவசாயம் செய்யும் பகுதி மரக்காணம். இந்த ஒன்றியத்திற்கு உட்பட்ட 56 பஞ்சயத்துகளில் உள்ள 100 க்கும் மேற்பட்ட கிராமங்களில் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் தர்பூசணி விவசாயம் செய்து ஜனவரி, பிப்ரவரி
மற்றும் மார்ச் மாதங்களில் அறுவடை செய்வது வழக்கம்.கடந்த இரண்டு ஆண்டுகளாக முருக்கேரி, சிறுவாடி, நகர், நடுக்குப்பம், அடசல், ஓமிப்பேர், வைடப்பாக்கம் உள்ளிட்ட கிராமத்தினர் பட்டம் மாறி ஜுலை மாதம் தர்பூசணி பயிர் செய்தனர். இதனால் விளைச்சல் ஐம்பது சதவீதம் மட்டுமே இருந்தது.
அறுவடை செய்யும் போது ரம்ஜான் பண்டிகை வந்ததால் டன் ஒன்றுக்கு 6,000 ரூபாய் முதல் 8,000 வரை விற்பனை விலை கிடைத்தது. சீசன் நேரங்களில் 2,000 ரூபாய் முதல் 4,000 வரை விற்பனை செய்யப்படுகிறது. சீசன் முடிவடைந்தவுடன் தர்பூசணி விவசாயம் செய்தால் அதிக லாபம் கிடைக்கும்.இதனால் இந்தாண்டும் கடந்த ஆண்டை போல் 100 ஏக்கருக்கு மேல் தர்பூசணி சாகுபடி செய்தனர். தட்ப வெப்பநிலை மாறியதால் முடக்கு மற்றும் வைரஸ் நோயால் தர்பூசணி

பயிர் கள் பாதிக்கப்பட் டுள் ளது.  கொடிகள் வளர்ச்சியின்றி கருகிய நிலையிலும், காய்கள் வளர்ச்சியில்லாமலும் போனதால் விவசாயிகள் பெருத்த நஷ்டம் அடைந்துள்ளனர்.இது குறித்து விவசாயி விஜயகுமார் கூறியதாவது:கடந்தாண்டு சீசன் இல் லாதபோது தர்பூசணி பயிர் செய்ததால் அதிக லாபம் கிடைத்தது. இதனை நம்பி இந்தாண் டும் அதிகமான விவசாயிகள் தர்பூசணி பயிர் செய்தனர். மழை பலமுறை பெய் ததால் செடிகள் வளர்ச்சியில்லாமல் போனது. இதனால் பிஞ்சுகள் விட வில்லை. பல விவசாயிகள் செடிகளை வெட்டிவிட் டனர். நோய் தடுப்பு மருந்துகள் தெளித் தும் பலன் கிடைக் கவில்லை. இவ்வாறு விஜயகுமார் கூறினார்.

**75 சதவீத மானியத்தில் முந்திரி கன்று விற்பனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2010,03:11 IST

விழுப்புரம்:விழுப்புரம் மாவட்ட தோட்டக்கலை துறை மூலம் 75 சதவீதம் மானி யத்தில் முந்திரி கன்றுகள் விற்பனை செய்யப் படுகின்றன.விழுப்புரம் தோட் டக்கலைத்துறை துணை இயக்குனர் (பொறுப்பு) பாலகிருஷ்ணன் விடுத் துள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:விழுப்புரம் மாவட்டத் தில் உள்நாட்டு தேவைகளை கருத்தில் கொண் டும், முந்திரி உற்பத்தி திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் தேசிய தோட்டக்கலை துறை முயற்சி மேற்கொண்டு வருகிறது. இத்துறையின் மூலம் 75 சதவீதம் மானியத்தில் விவசாயிகளுக்கு வீ.ஆர்.ஐ. 3 ரக முந்திரி கன்றுகள் விற்பனை செய்யப்படுகின்றன.தண்ணீர் தேங்காத களர் மற்றும் உவர் நிலமில்லாத நிலம் உள்ள விவசாயிகள் முந்திரி சாகுபடி செய்யலாம். மேலும் முந்திரி சாகுபடி செய்யும் விவசாயிகள் 65 சதவீதம் அரசு மானியத்தில் சொட்டு நீர் பாசன கரு விகள் அமைத்து முந்திரி சாகுபடி செய்து பயன டையலாம்.

**சப்-கலெக்டர் அலுவலகத்தில், விவசாயிகள் குறை கேட்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2010,02:58 IST

திண்டிவனம்:திண்டிவனம் சப்-கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை கேட்பு  கூட்டம் நடந்தது. திண்டிவனம் ஆர்.டி. ஓ.,மஞ்சுளா தலைமை தாங்கினார். தாசில்தார் வேலாயுதன் பிள்ளை, வேளாண்மை உதவி இயக் குனர் பழனிவேலு,  சார்பதிவாளர் இளங்கோவன், கூட்டுறவு சார்பதிவாளர் மணி, வல்லம் மின் பொறியாளர் சுஜாதா, திண்டிவனம் மின்துறை உதவி செயற்பொறியாளர் ரேவதி, போக்குவரத்து கழக கிளை கண்காணிப் பாளர் சங்கர், மார்க்கெட்

கமிட்டி கண்காணிப்பாளர் பூவராகமூர்த்தி மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.விவசாய சங்க பிரதிநிதிகள் கடவம்பாக்கம் மணி, ரவி, ரங்கநாதன், பிரபாகரன், ஆதிபகவான் உள் ளிட்டோர் விவசா யிகளின் குறைகள் குறித்து அதிகாரி களிடம் முறையிட்டனர்.

**ஓசோன் பாதுகாப்பு இயக்கம் இலவசமாக விதைகள் வழங்கல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2010,03:14 IST

விழுப்புரம்:விழுப்புரத்தில் ஆடிப் பட்டத்தில் காய்கறிகள் பயிர் செய்யும் பழக்கத்தை ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு முகாம் நடந்தது.விழுப்புரத்தில் உள்ள ஓசோன் பாதுகாப்பு இயக்க அலுவலகத்தில் விழிப்புணர்வு முகாம் நடந்தது. ஓசோன் பாதுகாப்பு இயக்க தலைவர் ராமன் தலைமை தாங்கினார். பொருளாளர்
ராசையன் வரவேற்றார். சுகாதாரத் துறை துணை இயக்குனர் கிருஷ்ணராஜ் பங்கேற்று பொதுமக்களுக்கு இலவசமாக விதைகளை வழங்கினார். முதன்மை கல்வி அலுவலர் குப்புசாமி சிறப்பு விருந் தினராகப் பங்கேற்று ஆடிப் பட்டத்தில் விதைகளை விதைத்து வீட்டுத் தோட் டம் அமைப்பது குறித்து ஆலோசனை வழங் கினார்.
தென்மண்டல காது, மூக்கு, தொண்டை ஆராய்ச்சி மைய மருத்துவர் வெற்றிவேல் இயற்கை காய்கறி உணவு குறித்து விளக்கிப் பேசினார். நிகழ்ச் சியில் வெள்ளரி, கத்தரி, வெண்டை, முருங்கை, தக் காளி, கீரை வகைகள் உள் ளிட்ட விதைகள் இலவச மாக வழங்கப்பட்டது. பால சுப்ரமணியன் நன்றி கூறினார்.

**வேகமாக பரவி வரும் மாவுப்பூச்சி கட்டுப்படுத்த அதிகாரி யோசனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2010,03:37 IST

இடைப்பாடி: "விவசாய பயிர்கள், பழ மரங்கள், அழகு பூச்செடிகள் ஆகியவற்றை தாக்கி வேகமாக பரவி வரும் "பப்பாளி மாவுப்பூச்சி'களை உடனடியாக கட்டுப்படுத்த பூச்சிகொல்லி மருந்துகளை தெளிக்கவேண்டும்' என, இடைப்பாடி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் தங்கராஜூ தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை:"பப்பாளி மாவுப்பூச்சி' வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்த தாவரங்களை தாக்கும் பூச்சி. இந்த பூச்சி பற்றி தமிழ்நாட்டில் முதன்முதலாக கடந்த ஆண்டு ஜூலையில் கோவை மாவட்டத்தில் கண்டறியப்பட்டது. பின் ஈரோடு மாவட்டத்திற்கும் தற்போது சேலம் மாவட்டத்திலும் வேகமாக பரவி வருகிறது. இந்த பூச்சி வெள்ளையாக இருக்கும். செடி, பழங்கள், பூக்கள் ஆகியவற்றின் மீது வெள்ளைக்கலரில் மாவு அப்பியது போல் காணப்படும் தாவரங்களை தாக்கும் மிக கொடிய பூச்சி இனத்தை சேர்ந்தது. இப்பூச்சியானது ஆண்டுபயிர்கள், பழப்பயிர்கள், காய்கறிகள், பூச்செடிகள், களைகள், அலங்காரச் செடிகள் ஆகியவற்றை தாக்கி வருகின்றன. பெரும்பாலும் பப்பாளி, மல்பெரி, கொய்யா, மரவள்ளி, பருத்தி, தேக்கு, காட்டாமணக்கு, செம்பருத்தி புலுமேரியா போன்ற பயிர்களை தாக்குகிறது.

தற்போதுள்ள தட்பவெட்ப சூழ்நிலை காரணமாக சேலம் மாவட்டத்தில் சில இடங்களிலும், இடைப்பாடி, கோனேரிப்பட்டி, நெடுங்குளம், சிலுவம்பாளையம், பூலாம்பட்டி போன்ற கிராமங்களில் ரோடு ஓரங்களில் உள்ள களைச்செடிகள், முட்செடிகள் மற்றும் சிலரது வீட்டு தோட்டத்தில் உள்ள பப்பாளி, கொய்யா, செம்பருத்தி, அலங்கார செடிகள் ஆகியவற்றிலும் இந்த பூச்சியின் தாக்குதல் தீவிரமாக உள்ளது.இந்த பூச்சி தற்போது பரவலாக ஆங்காங்கே காணப்பட்டாலும் அது மேலும் அனைத்து பயிர்களுக்கும் பரவ வாய்ப்பு உள்ளது. எனவே அனைத்து விவசாய பெருமக்களும் இந்த பூச்சி பரவலை தடுக்க வேண்டும். அதற்கென உள்ள பூச்சி தடுப்பு முறைகளை இடைப்பாடி விவசாய விரிவாக்க மையத்தில் உள்ள அதிகாரிகளிடம் கலந்து, இந்த பூச்சியை தடுக்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**நிலக்கடலை பயிருக்கு மானிய விலையில் ஜிப்ஸம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2010,03:43 IST

கோபிசெட்டிபாளையம்: மானாவாரி நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூல் பெற ஜிப்ஸம் இட வேண்டும் என, கோபி வேளாண் உதவி இயக்குநர் ஆசைதம்பி தெரிவித்துள்ளார்.அவரது அறிக்கை:கோபி வட்டாரத்தில் மானாவாரியில் 2,000 ஏக்கருக்கு மேல் நிலக்கடலை பயிரிடப்பட்டுள்ளது. நிலக்கடலை வளர்ச்சிக்கு, கால்சியம் சத்து 18 முதல் 23 சதவீதம் வரை உள்ள ஜிப்ஸம் முக்கிய பங்கு வகிக்கிறது. நிலக்கடலையில் எண்ணெய் சத்து அதிகரிக்க கந்தகம் அடங்கிய ஜிப்ஸம் இடவேண்டும். இதனால் மண் இறுக்கம் தளர்த்தப்பட்டு, காய்களின் பருமன் ஒரே மாதிரியாகவும், திரட்சியாகவும் வளரும். ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்ஸம் அடியுரமாக இடவேண்டும். விதைத்த 45வது நாளில் களை எடுக்கும் முன் இட்டு மண் அணைத்தால் சாகுபடி

பெருகும்.கோபி, கூகலூர் மற்றும் வெள்ளாங்கோவில் வேளாண் விரிவாக்க மையங்களில் மான்ய விலையில் ஜிப்ஸம் வழங்கப்படுகிறது.

**மானிய விலையில் சம்பா விதை நெல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2010,01:28 IST

பட்டுக்கோட்டை: "பட்டுக்கோட்டை வட்டார விவசாயிகளுக்கு மானிய விலையில் சம்பா விதை நெல் வழங்கப்படும்' என வேளாண் உதவி இயக்குனர் சண்முகம் தெரிவித்தார்.

அவர் வெளியிட்ட அறிக்கை:பட்டுக்கோட்டை பகுதியில் சம்பா பட்டத்துக்கு ஏற்ற ரகங்களான சி.ஆர்.1009, கோ 43 மற்றும் ஆடுதுறை 39 ஆகிய ரகங்கள் சான்று பெற்ற விதைகள். இவை கிலோ ஒன்று ஐந்து ரூபாய் வீதம் மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போதைக்கு சி.ஆர்.1009 ரக நெல் மட்டுமே விநியோகிக்கப்படுகிறது. அடுத்தடுத்து மற்ற நெல் ரகங்களும் விநியோகிக்கப்படும். விதை நெல் தேவைப்படும் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை உதவி அலுவலர்களை தொடர்புகொண்டு தேவைப்படும் நெல்லை மானிய விலையில் பெற்றுக் கொள்ளலாம். இருப்பில் உள்ள நெல்லை பகிர்ந்து வழங்கி அனைத்து விவசாயிகளும் பயன்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், விதை கிராம திட்டத்தின் கீழ் பட்டுக்கோட்டை, பொன்னவராயன்கோட்டை, நல்வழிக்கொல்லை, ஆலடிக்குமுளை, வெண்டாக்கோட்டை, துவரங்குறிச்சி, கொண்டிக்குளம் மற்றும் பழஞ்சூர் ஆகிய கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு 50 சதவீத மானிய விலையில் விதை நெல் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி விவசாயிகள் பயன்பெற வேண்டும்.

**துல்லிய பண்ணை திட்டம் அமைக்க முடிவு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2010,02:56 IST

பள்ளிபாளையம்: "துல்லிய பண்ணைத் திட்டம் 40 ஹெக்டேர் பரப்பளவில் அமைக்கப்பட உள்ளது' என, பள்ளிபாளையம் வேளாண் உதவி இயக்குனர் முரளிதரன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:கரும்பு பயிரில் சொட்டு நீர் உரப்பாசனத்தை அதிகமான விவசாயிகள் பின்பற்றி வருகின்றனர். தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், துல்லிய பண்ணையம்

அமைக்க ஒரு விவசாயிக்கு சொந்தமாக ஒரு ஹெக்டேர் நிலம், போதுமான நீர் ஆதாரம் தேவை. ஒரு ஹெக்டருக்கு குறைவாக நிலம் உள்ள இரண்டு விவசாயிகள் முறையாக ஒப்பந்தம் பதிவு செய்து பொதுவான நீர் ஆதாரத்தை பயன்படுத்தி இத்திட்டத்தில் பயன்பெறலாம்.எளிதான திட்டத்தில் செயலாக்கத்துக்காக தொகுப்பு அணுகு முறையில் கிளஸ்டர் பரப்பில் துல்லிய பண்ணைய திட்டம் செயல்படுத்தப்படும். ஒரு தொகுப்பில் உள்ள விவசாயிகள் இணைந்து சங்கம் அமைத்து பதிவு செய்து கொள்ள வேண்டும். புதிதாக இந்தாண்டு கரும்பு நடவு செய்ய உள்ள விவசாயிகளுக்கு இத்திட்ட மானியம் அனுமதிக்கப்படும்.

மறுதாம்பு பயிர்களுக்கு அனுமதியில்லை. நடவு வயலை உளிக்கலப்பை மூலம் உழவு செய்ய வேண்டும். அனைத்து தொழில் நுட்பங்களையும் பின்பற்றக் கூடிய விவசாயிகள் மட்டுமே இத்திட்டத்தில் பங்கு பெற இயலம். நிலம் உரிமையாளர் பெயரில் இருப்பதற்கான ஆதாரமாக சிட்டா, அடங்கல் போன்றவற்றை விண்ணப்பத்துடன் விவசாயிகள் இணைத்து விண்ணப்பிக்கலாம்.குத்தகை நிலமாக இருப்பின் முறையான ஆவணங்களை ஆதாரமாக விண்ணப்பதுடன் இணைக்க வேண்டும். சொட்டு நீர் பாசனத்திற்கான மானியத்தை தவிர நீரில் கரையும் உரங்களும் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படும். துல்லிய பண்ணைத் திட்ட வயல் மண், அதிக அளவு களர் அமிலம் மற்றும் உப்புத் தன்மை இல்லாமல் இருக்க வேண்டும்.துல்லிய பண்ணைய திட்டத்திற்கான விவசாயிகள் தேர்வு நடப்பதால், சொட்டு நீர் பாசனம் அமைக்க விரும்பும் வவசாயிகள் பள்ளிபாளையம் வேளாண் விரிவாக்க மையத்தை அணுகலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சின்ன வெங்காயம் பயிரிட அழைப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2010,02:57 IST

நாமக்கல்: "விவசாயிகள் சின்ன வெங்காயம் பயிரிட்டு அதிக லாபம் பெறலாம்' என, நாமக்கல் வேளாண் துணை இயக்குனர் சுப்ரமணியம் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:இந்தியாவின் முக்கிய காய்கறிப் பயிர்களில் வெங்காயமும் ஒன்று. நாட்டின் மொத்த உற்பத்தியில் வெங்காயத்தின் பங்களிப்பு 10.5 சதவீதம். தேசிய தோட்டக்கலை வாரியத்தின் கணக்கீட்டின்படி 2008-09ம் ஆண்டில் 135.65 லட்சம் டன்கள் வெங்காயத்தை 8.34 லட்சம் ஹெக்டேரில் இந்தியா உற்பத்தி செய்துள்ளது.மொத்த வெங்காய உற்பத்தியில் மகாராஷ்டிரா மாநிலம் 28.9 சதவீதம் உற்பத்தி செய்து முன்னிலை வகிக்கிறது. கர்நாடகா 22.35 சதம், குஜராத் 10.39 சதம், மத்தியப்பிரதேசம் 6.5 சதம், ஆந்திரா 4.88 சதம், ராஜஸ்தான் 2.72 சதம் மற்றும் ஹரியானா 2.56 சதம் உற்பத்தியில் பங்களிக்கின்றன.

2009-10ம் ஆண்டில் இந்தியாவிலிருந்து 18.73 லட்சம் டன் வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டுளது. தமிழகம் 3.05 லட்சம் டன் வெங்காயத்தை 0.35 லட்சம் ஹெக்டேரில் உற்பத்தி செய்தது.பெரம்பலூர் மாவட்டம் 24.6 சதவீதம் உற்பத்தி செய்து முன்னிலை வகிக்கிறது. திருச்சி 14.2 சதம், கோவை 13.7 சதம், ஈரோடு 10.8 சதம் ஆகிய மாவட்டங்கள் முக்கிய பங்களிக்கின்றன. மொத்த உற்பத்தியில் சின்ன வெங்காயம் 75 சதவீதம் பங்களிக்கிறது.மே 2010ல் கிலோவுக்கு 12 ரூபாய் வரை விற்ற சின்ன வெங்காயம் விலை உயர்ந்து ஜூன் மாதம் கிலோ 16 ரூபாய்க்கு விற்றது. தமிழக விவசாயிகள் வரும் பருவத்தில வெங்காயம் விதைக்க வேண்டிய தருணத்தில் உள்ளனர்.நாட்டின் வெங்காய உற்பத்தியில் கர்நாடகா இரண்டாமிடம் வகிக்கிறது. வர்த்தக மூலங்களின்படி ஏப்ரல், மே, ஜூன், செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் கர்நாடகா வரத்துக்கள் இருக்கும்.நல்லதரமான வெங்காயத்தின் விலை வரும் அக்டோபர் முதல் நவம்பரில் கிலோ 13 ரூபாயில் இருந்து 16 ரூபாய் வரை இருக்கும் என, உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையத்தின் ஆய்வு முடிவுகள் தெரிவிக்கிறது. சுமாரான ரகங்கள் 10 ரூபாய் முதல் 13 ரூபாய் வரை இருக்கும் என கணித்துள்ளது.அதனால், விவசாயிகள் ஜூலை மாதத்தில் வெங்காயம் விதைக்க சிபாரிசு செய்யப்படுகின்றனர். விதை மூலம் உற்பத்தி செய்யப்படும் வெங்காயத்தை விதைத்தால் பயிர்ச்செலவு குறையும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**விவசாயிகள் கவனத்திற்கு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2010,01:43 IST

காரைக்குடி:வேளாண்மை உதவி இயக்குனர் கண்ணன் கூறியதாவது:சாக்கோட்டை, காரைக் குடி விரிவாக்க மையங்களில், சான்று பெற்ற நெல் விதைகளான "ஏடிடீ-39, பிபீடி-5204, ஏடிடீ-45' விற்பனைக்கு உள்ளன. கிலோவுக்கு ஐந்து ரூபாய் வீதம் மானிய விலையில் வழங்கப்படும். சாக் கோட்டை, மித்ராவயல் பிர்காவில் நேரடி நெல் விதைப்பு செய்யும் விவசாயிகள், விதைகளை பெறலாம். உரிமம் பெறாத கடைகளில் தரமற்ற விதைகளை வாங்க வேண்டாம் என்றார்.

**சோலையாறு நீர்மட்டம் 123 அடியாக உயர்வு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2010,03:25 IST

வால்பாறை : வால்பாறையில் மழைப்பொழிவு குறைந்த நிலையில் சோலையாறு அணையின் நீர்மட்டம் நேற்று காலை 123 அடியாக உயர்ந்தது.வால்பாறையில் கடந்த ஒரு மாதமாக தென்மேற்குப்பருவ மழை பெய்துவருகிறது. இதனையடுத்து சோலையாறு அணையின் நீர்பிடிப்பு

பகுதிகளான அக்காமலை, சின்னக்கல்லார், கீழ்நீராறு, வெள்ளமலை, நடுமலை, கெஜமுடி உள்ளிட்ட பகுதிகளில் தண்ணீர் வரத்து அதிகரித்தது. வால்பாறை டவுன் பகுதி மக்களின் குடிநீர் ஆதாரமாக விளங்கும் அக்காமலை செக் டேம் கடந்த மாதம் நிரம்பியது.சோலையாறு அணையின் நீர்மட்டமும், தொகுப்பு அணைகளான மேல்நீராறு, கீழ்நீராறு, அப்பர்ஆழியாறு மற்றும் காடம்பாறை அணைகளின் நீர்மட்டமும் வேகமாக உயர்ந்தது. இந்நிலையில் வால்பாறையில் கடந்த மூன்று நாட்களாக மழைப்பொழிவு குறைந்து காணப்படுகிறது.

இதனால் அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளில் தண்ணீர் வரத்து குறைந்தது. வால்பாறையில் மழைப்பொழிவு குறைந் துள்ள நிலையில் சோலையாறு அணையின் நீர்மட்டம் 160 அடி உயரத்தில் நேற்று காலை 123.48 அடியாக உயர்ந்தது. அணைக்கு விநாடிக்கு ஆயிரத்து 749 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து மானாம் பள்ளி பவர் ஹவுஸ் வழியாக பரம்பிக்குளத்திற்கு 803 கன அடி தண்ணீரும், கேரள சோலையாறுக்கு 674 கன அடி தண்ணீரும் வெளியேற்றப்படுகிறது. வால்பாறையில் நேற்று காலை 8.00 மணி வரை பதிவான மழையளவு (மில்லி மீட்டரில்) வால்பாறை - 2, மேல்நீராறு - 1, கீழ் நீராறு - 1.

**தொழிற்சாலைகளில் கூடுதல் "டிரப்கள்' பசுந்தேயிலை வீணாகுவதற்கு விடியல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2010,02:33 IST

மஞ்சூர் : கோட்டா முறையை தவிர்க்க கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் கூடுதல் "டிரப்கள்' அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் மஞ்சூர், கிண்ணக்கொரை, பிக்கட்டி, எடக்காடு, இத்தலார், மேற்குநாடு, கைக்காட்டி, மகாலிங்கம், கட்டபெட்டு, எப்பநாடு, பந்தலூர், சாலிஸ்பரி, பிராண்டியா உள்ளிட்ட 15 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் 30 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் அங்கத்தினர்களாக உள்ளனர். தங்களது தோட்டத்தில் பறிக்கும் பசுந்தேயிலையை மேற்கண்ட தொழிற்சாலைக்கு விவசாயிகள் வினியோகித்து வருகின்றனர். மாவட்டத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளும் துவக்கப்பட்டு 40 ஆண்டுக்கு மேலாகிவிட்டது. இதனால் தொழிற்சாலைகளில் உள்ள இயந்திரங்கள் பழுதாகி செயல்திறன் குறைந்து காணப்படுகிறது.இதன் காரணமாக தரமான தேயிலை தூள் தயாரிப்பதில் நடைமுறை சிக்கல் ஏற்பட்டு வருகிறது. மேலும் உற்பத்தி செலவினங்கள் பன்மடங்கு அதிகரித்து பசுந்தேயிலைக்கு உரிய விலை வழங்க முடியாமல் தொழிற்சாலை நிர்வாகங்கள் திணறி வருகின்றன. இதனால் பெரும்பாலான கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் கடந்த சில ஆண்டுகளாக நஷ்டத்தில் இயங்கி வருகின்றன.இதனை தொடர்ந்து மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, மாநில அரசு சார்பில் 50 சதவீதம்

கடனுதவியுடன் தேயிலை வாரியம் சார்பில் 25 சதவீத பங்களிப்பும் வழங்கப்பட்டு பல கோடி மதிப்பீட்டில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் மறு சீரமைப்பு பணி மேற்கொள்ளப்பட்டது.இதனால், மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் உள்ள பழைய இயந்திரங்கள் அனைத் தும் முற்றிலும் மாற்றப்பட்டு, புதியதாக நவீன இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து தொழிலாளர் பற்றாக்குறையை போக்க அனைவத்து கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளிலும் 4 லட்சம் மதிப்பீட்டில் விறகு உடைக்கும் இயந்திரமும் அமைக்கப்பட்டுள்ளது.மேலும் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் விறகு எடைபோட 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடைமேடை அமைக்கும் பணியும் தீவிரமாக நடந்து வருகிறது. அங்கத்தினர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் பசுந்தேயிலைகளை போதிய டிரப்கள் இல்லாததால் ஏற்கனவே உள்ள டிரப்களில் அதிகளவில் கொட்ட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.இதனால் பெரும்பாலான தொழிற்சாலைகளில் பசுந்தேயிலைகள் வெந்து வீணாகி பெரும் இழப்பு ஏற்பட்டு வருகிறது. இந்த தொழிற்சாலைகளில் கூடுதல் டிரப்கள் அமைப்பதன் மூலம் பசுந்தேயிலை வெந்து போவது தவிர்க்கப்படும்.இதனால், தேயிலை வரத்து அதிகரிக்கும் சமயங்களிலும் கோட்டா முறைக்கு அவசியம் ஏற்பட வாய்ப்பில்லை. இதனை தொடர்ந்து மாவட்டத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளிலும் கூடுதல் டிரப்கள் அமைக்கும் பணி துவங்கி நடந்து வருகிறது. இப்பணிகள் முடிந்தால் கோட்டா முறை தவிர்க்கப்படும் என்பதே விவசாயிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.

**அணை திறக்கப்படாததால் நெல் சாகுபடி பாதிப்பு : குடிநீர் தட்டுப்பாடும் ஏற்படும் அபாயம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2010,01:55 IST

திண்டுக்கல் : பெரியாறு அணையிலிருந்து கூடுதல் நீர் திறக்கப்படாததால் வைகை அணை நீர்மட்டம் உயருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் அணை திறப்பு தாமதமாகி மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களில் முதல் போக சாகுபடி பணிகள் பாதிப்படைந்துள்ளது. திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் உள்ள மூன்றாயிரம் ஏக்கர் நிலத்திற்கான நெல் சாகுபடி, வைகை அணையை நம்பியுள்ளது. பெரியாறு அணையிலிருந்து கூடுதலாக நீர் வெளியேற்றப்பட்டால் மட்டுமே வைகை அணை திறக்கப்பட்டு இப்பகுதியில் சாகுபடி மேற்கொள்ள முடியும்.தற்போது பெரியாறு அணை யிலிருந்து கம்பம் பள்ளத்தாக்கு பாசனத்திற்கு மட்டுமே நீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இதன் உபரி நீர்மட்டுமே வைகை அணைக்கு வந்து சேர்கிறது. இதனால் அணையின் நீர்மட்டம் உயருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.வைகை அணையில் போதுமான நீர்

இல்லாததால் சாகுபடிக்கு திறப்பது தாமதமாகி வருவதால் முதல்போக சாகுபடி பாதிப்படைந்துள்ளது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க திண்டுக்கல் மாவட்ட செயலாளர் சச்சிதானந்தம் கூறியதாவது:முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டம் 120 அடிக்கு மேல் இருக் கும்போது, திண்டுக்கல், மதுரை மாவட்ட பாசன பகுதிகளுக்கு தண்ணீர் திறக்க வேண்டும். ஜூலை இறுதியில் முல்லைப் பெரியாறு அணை 120 அடியை எட்டியபோதும் நீர்வரத்து குறைந்ததால் தண்ணீர் திறக்கப்படவில்லை.இதனால் வைகை அணை நீர்மட்டமும் உயரவில்லை. அணை திறப்பை எதிர்பார்த்து இதுவரை மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களில் முதல்போக சாகுபடி பணிகளை விவசாயிகள் துவங்கவில்லை.இதனால் ஆயிரக்கணக்கான குறு விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். நிலக்கோட்டையில் ஏராளமான விவசாயிகள், கோயில் குத்தகை நிலங்களை பராமரிக்கின்றனர். தற்போது சாகுபடி மேற்கொள்ளப்படாததால், குத்தகை செலுத்துவதற்கு சிரமப்படும் நிலை உருவாகியுள்ளது. இவர்களுக்கு நிவாரணமாக தலா பத்தாயிரம் ரூபாய் அரசு வழங்க வேண்டும் என்றார்.மேலும் உசிலம்பட்டி, திண்டுக் கல், சின்னாளபட்டி, நிலக்கோட்டை பகுதிகளின் குடிநீர் வினியோகத்திற்காக, இப்பகுதியில் 27 கிணறுகள் அமைக்கப்பட் டுள்ளன. நீர்மட்ட குறைவு காரணமாக, பெரும்பாலான இடங்களில் குடிநீர் தட்டுப்பாடு அபாயம் ஏற்பட் டுள்ளது.

**தரமான விதை உற்பத்திக்கு கூடுதல் மான்யம் தர முடிவு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2010,02:12 IST

வடமதுரை : விவசாயத்தில் தரமற்ற விதைகளை பயன்படுத்துவதால் நோய் கிருமிகள் வெளி மண்ணிலிருந்து வருவது, முளைப்பு திறன் பாதிப்பது, குறைந்த மகசூல் தருவது, உரிய வளர்ச்சியின்மை, உரம், தண்ணீர் வீணாவது, சற்று கூடுதல் வெப்பதினாலோ, குளிரிலோ காய்ந்து விடுவது, பூச்சி மற்றும் நோய்களால் எளிதில் பாதிப்படைகிறது. இதனால் தரமான விதைகளை அதிகளவில் உற்பத்தி செய்து, இருப்பு வைக்கும் நோக்கில் விதைப் பண்ணை அமைத்தல் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. வடமதுரை வட்டாரத்தில் நெல் விதை 13.3 டன்னும், சிறுதானிய விதை 3 டன்னும், பயிறு விதை 11.4 டன்னும், எண்ணெய் வித்து விதை 13 டன்னும் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. தரமான விதை உற் பத்தியை ஊக்கப்படுத்திடும் வகையில் நெல் மற்றும் சிறுதானிய விதைகளுக்கு உள்ளூர் கொள்முதல் விலையுடன் கிலோவிற்கு இரண்டு ரூபாய் கூடுதலாக தர முடிவு செய்யப் பட்டுள்ளது. பயிறு வகை விதைகளுக்கு ரூ.10ம், சான்று விதைக்கு ரூ.5ம் இதனுடன் 20 சதவிகித ஊக்க தொகை மற்றும்

மத்திய அரசு மான்யம் ரூ.20ம் வழங்கப்படும். அரசு மூலம் விதைப் பண்ணை அமைத்து தரமான விதை உற்பத்திக்கு விரும்பும் விவசாயிகள் உதவி விதை அலுவலர் வெங்கடாசலத்தை அணுகலாம் என உதவி இயக்குனர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

**பயறு வகை உற்பத்தியை அதிகரிக்க ரூ. 15 லட்சம் ஒதுக்கீடு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2010,02:38 IST

மதுரை : தேசிய அளவில் உணவு உற்பத்தி, மண்வளம், பயிர் உற்பத்தி திறன், வேலை வாய்ப்பு, பண்ணை வருமானம் அதிகரிக்க மத்திய அரசால் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் உருவாக்கப்பட்டுள்ளது.மதுரை மாவட்டத்தில் இந்த ஆண்டில் இத்திட்டம் பயறு வகைகளில் அமல்படுத்தப்பட உள்ளது. இதற்காக ரூ. 15 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குவிண்டாலுக்கு ரூ. 5230 மானியம் வழங்கப்படும். விதை இனத்தில் ஆதாரவிதை, சான்றுவிதை கொள்முதலுக்கு ரூ. ஆயிரம் மானியமாக வழங்கப் பட்டுள்ளது. இதற்காக ஆதார விதை உற்பத்திக்கு 20 குவின்டாலும், சான்று விதை உற்பத்திக்கு 303 குவின்டாலும் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சான்று விதை வினியோகத்திற்கு கிலோவுக்கு மானியமாக ரூ. 12 வீதம் 353 குவின்டால் இலக்காக நிர்ணயிக்கப்பட்டு ரூ. 4.23 லட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

மதுரையில் பயறு வகை உற்பத்தியை அதிகரிக்க 4 எக்டேர் பரப்பில் 36 செயல்விளக்கங்கள் அமைக்க செயல் விளக்கத்திற்கு ரூ. 4 ஆயிரம் மானியம் வழங்கப் பட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை தொழில்நுட்பத்திற்கு ரூ. 5.25 லட்சம், மண்வளத்தை மேம்படுத்த நுண்ணுயிர் பொட்டலங்கள் வழங்க எக்டேருக்கு ரூ. 100, பூச்சிக் கொல்லி வழங்க 43 ஆயிரம், 18 மருந்து தெளிப்பான்களுக்காக ரூ. 54 ஆயிரம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.மண்ணின் தன்மையை மாற்ற ரோட்டோ வேட்டர் இயந்திரத்திற்கு ரூ. 30 ஆயிரம், மோட்டார் இயந்திரங்களுக்கு ரூ. 50 ஆயிரம், தெளிப்பு நீர் கருவிகளுக்கு ரூ. 15 ஆயிரம், நீர்கடத்தும் குழாய்களுக்கு ரூ. 90 ஆயிரம், தார்பாலின் வாங்க ரூ. 25 ஆயிரத்து 200 மானியம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும் என கலெக்டர் சி.காமராஜ் தெரிவித்துள்ளார்.

**குறைந்த நீரில் அதிக வருவாய் தரும் பயிர்கள் தோட்டக்கலைத்துறை அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2010,02:37 IST

செக்கானூரணி : தமிழகத்தில் தற்போது சாகுபடி செய்யப்படும் குறைந்த வருவாய் தரும் பயிர்களுக்கு பதில் குறைந்த நீரில் அதிக வருவாய் தரும் தோட்டக்கலைப் பயிர்களை பயிரிட்டு பயனடையுமாறு தோட்டக்கலைத்துறையினர் அறிவித்து உள்ளனர்.

இதுகுறித்து திருமங்கலம் வட்டார தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் ஜவஹரிபாய் அறிவிப்பு: விவசாயத்திற்கான பாசன நீர் குறைந்து வரும் நிலையில் விளை நிலங்கள் தரிசுகளாக மாறி வருகின்றன. இருக்கும் நீர்வள ஆதாரத்தை மேம்படுத்த அரசின் பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து விவசாயிகளின் வாழக்கைத் தரத்தை உயர்த்துவதற்காக உருவக்கப்பட்டது தான் தமிழக நீர்வள, நிலவளத்திட்டம். இத்திட்டத்தின் மூலம் திருமங்கலம் வட்டாரத்தில் தெற்காறு மற்றும் மேல்குண்டாறு உபவடிநிலப்பகுதிகளின் கண்மாய் ஆயக்கட்டுப் பகுதிகளில் குறைந்த வருவாய் தரும் பயிர்களுக்கு பதில் குறைந்த நீர்த்தேவையுள்ள தோட்டக்கலைப் பயிர்களை சாகுபடி செய்து விவசாயிகளை அதிக வருவாய் பெறச்செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் காய்கறி பயிர்களை சாகுபடி செய்ய தேவையான விதை, உரம், பயிர் பாதுகாப்பு மருந்துகள் விவசாயிகளுக்கு குழு மானியத்தில் வழங்கப்படுகின்றன. விவசாயிகள் இதைப்பயன்படுத்தி பயன்பெறலாம். மேலும் விபரங்களுக்கு தோட்டக்கலை அலுவலர் மணிவேலுவை தொடர்பு கொள்ளவும். இவ்வாறு கூறியுள்ளார்.

**சமையல் எண்ணெய்கள் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2010,02:41 IST

மதுரை : மலேசியாவில் பாமாயில் உற்பத்தி குறைவு உட்பட அனைத்து சமையல் எண்ணெய்களின் மூலப் பொருட்கள் உற்பத்தி குறைந்துஉள்ளதால், மதுரையில் இதன் விலை அதிகரித்துள்ளது.எண்ணெய் வியாபாரிகள் சங்க முன்னாள் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது :கடந்த வாரம் 680 ரூபாய்க்கு விற்ற 15 கிலோ டின் பாமாயில், நேற்று 720 ரூபாய்க்கு விற்கப்பட்டது. கடலை எண்ணெய் விலை தொடர்ந்துஏறுமுகமாக உள்ளது. கடந்த வாரம் 1260 ரூபாய்க்கு விற்ற நிலையில் நேற்று 1290 ரூபாய்க்கு விற்கப்பட்டது. ரைஸ்பிரான் ஆயில் 730 ரூபாயில் இருந்து 760 ரூபாய்க்கும், சூரியகாந்தி எண்ணெய் 830 ரூபாயில் இருந்து 870 ரூபாய்க்கும், வனஸ்பதி 760 ரூபாயில் இருந்து 780 ரூபாய்க்கும் விற்கப் பட்டது.தேங்காய் எண்ணெய் 980 ரூபாயில் இருந்து 1000 ரூபாய்க்கும், நல்லெண்ணெய் 1110 ரூபாயில் இருந்து

1150 ரூபாய்க்கும், தும்பை நல்லெண்ணெய் 1570 ரூபாயில் இருந்து 1600 ரூபாய்க்கும் விற்கப் பட்டது என்றார்.

**பருப்பு விலை குறைகிறது**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2010,02:41 IST

மதுரை : ""மதுரையில் உளுந்து, துவரை உட்பட அனைத்து பருப்பு வரத்து ஆரம்பித்துஉள்ளதால் விலை குறைந்துள்ளது. வரும் வாரங்களில் மேலும் விலை குறைய வாய்ப்பு உள்ளது," என்கிறார் பருப்பு வியாபாரிகள் சங்க செயலாளர் வெற்றிச்செல்வன்.அவர் கூறியதாவது :கடந்த வாரம் 5350 ரூபாய்க்கு விற்ற நூறு கிலோ உளுந்தம் பயறு நேற்று 5250 ரூபாய்க்கும், பருப்பு 7700லிருந்து 7600க்கும் விற்கப்பட்டது. வெள்ளை துவரை பயறு 4200லிருந்து 4100க்கும், சிவப்பு பயறு 4250லிருந்து 4150க்கும், பருப்பு 6200லிருந்து 6100க்கும் விற்கப்பட்டது.பாசி பயறு 5400லிருந்து 5300க்கும்,அவியல் பயறு 6600லிருந்து 6500க்கும் விற்கப்பட்டது. பருப்பு மட்டும் 7100லிருந்து 7500 ஆக உயர்ந்துள்ளது. கடலை பயறு 2650லிருந்து 2550க்கும், பருப்பு 3150லிருந்து 3050க்கும் விற்கப் பட்டது.பட்டாணி பயறு 1600லிருந்து 1650க்கும், பருப்பு 1900லிருந்து 1950க்கும் விற்கப் பட்டது என்றார்.

**காய்கறிகள் விலை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2010,02:40 IST

மதுரை : மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டிற்கு அனைத்து காய்கறி வரத்தும் குறைந்து உள்ளதால், அதன் விலை கிலோவிற்கு இரண்டு ரூபாய் அதிகரித்துள்ளது.

சங்கத் தலைவர் முருகன் கூறியதாவது:ஒரு கிலோ தக்காளி 16 ரூபாய், உருட்டு தக்காளி 10, கத்தரிக்காய் 12, வெள்ளை கத்தரிக்காய் 7, சுரைக்காய் 5, புடலங்காய் 7, பூசணிக்காய் 5, கேரட் 25, முள்ளங்கி 9, பீட்ரூட் 10, உருளைகிழங்கு 10-15, சேனைகிழங்கு 25, கருணைகிழங்கு 30, வெங்காயம் 12, சிறியது 20, பாகற்காய் 15, சிறியது 25, இஞ்சி 30, வெண்டைக்காய் 10, முருங்கைக்காய் 20, பீன்ஸ் 28, பட்டர் பீன்ஸ் 25, சோயா பீன்ஸ் 20, அவரைக்காய் 15, கீரை வகைகள் 10, புதினா 6, கொத்தமல்லி 7, கறிவேப்பிலை 12, கொத்தவரை 7, பட்டாணி 40, நூக்கல் 15, சவ்சவ் 10, பச்சை மிளகாய் 15, ஆந்திரா பச்சை மிளகாய் 10 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

நேற்றைய ஆடிப்பெருக்கும் விலை உயர்வுக்கு காரணம் என்றார்.சென்ட்ரல் மார்க்கெட் விலைக்கும், மற்ற இடங்களில் விற்கப்படும் விலைக்கும் சம்பந்தமில்லை.

**செவ்வந்தி விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2010,02:40 IST

மதுரை : ஓணம் பண்டிகை நெருங்குவதால்,மதுரைக்கு கூடலூர் பகுதியில் இருந்து செவ்வந்தி வரத்து ஆரம்பித்துள்ளது. நேற்று கிலோ 70 ரூபாய்க்கு விற்கப் பட்டது. ""பண்டிகை நெருங்க நெருங்க இதன் விலை அதிகரிக்கும்,'' என்கிறார் பூ மார்க்கெட் சங்கத் தலைவர் சோ.ராமச்சந்திரன். மற்ற பூ விலை குறித்து கூறியதாவது :ஒரு கிலோ மல்லிகை 100-80 ரூபாய், முல்லைப்பூ 120, பிச்சிப்பூ 150, சம்பங்கி 50, கோழிக் கொண்டை 30, மெட்ராஸ் மல்லி 120, கனகாம்பரம் 200, மரிக்கொழுந்து 30, அரளி 70 ரூபாய்க்கு விற்கப்பட்டது. மல்லிகை விலை கடந்த வாரம் 150 ரூபாய்க்கு விற்கப் பட்டது. இந்த வாரம் 80 ரூபாய் வரை குறைந்து உள்ளது. வரும் வாரங்களில் விலை குறையும் என எதிர்பார்க்கிறோம் என்றார்.

**சீட்லெஸ் நாவற்பழம் ரூ.170**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2010,02:43 IST

மதுரை : மதுரையில் ஒரு கிலோ நாவற்பழம் 110 ரூபாய்க்கும், சீட்லெஸ் நாவற்பழம் 170 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. யானைக்கல் வியாபாரி செந்தில் கூறியதாவது :ஒரு கிலோ ஆப்பிள் 90-130 ரூபாய், சாத்துக்குடி 30, காபூல் மாதுளை 100, சீட்லெஸ் மாதுளை 90, பன்னீர் திராட்சை 40-70, சப்போட்டா 25, சீத்தாப்பழம் 30, அன்னாசி 30, பப்பாளி 25, மலைவாழைப்பழம் ஒன்று 5, மோரீஸ் வாழைப்பழம் கிலோ 20, பேரிக்காய் 60, ஆஸி. ஆரஞ்சு 110,கொடை ஆரஞ்சு 70 ரூபாய்க்கு விற்கப்படுகிறதுஎன்றார்.

**பூ விற்பனை நார்மல்; பருப்பு விற்பனை ஜோர்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2010,02:45 IST

திருப்பூர் : ஆடிப்பெருக்கு திருவிழா என்பதால், தென் னம்பாளையம் மார்க் கெட்டில் காய்கறி விற் பனை நேற்று வெகுவாக குறைந்திருந்தது. பொங்கலூர், பல்லடம், திருப்பூர் தெற்கு பகுதிகளில் இருந்து தென்னம்பாளையம் மார்க்கெட்டுக்கு அதிகளவில் காய்கறிகள் வருகின்றன. வடக்கு உழவர் சந்தை நிர்வாக அதிகாரி ராமலிங்கம் கூறியதாவது:தினமும் 160 விவசாயிகள் வரை வருவர்; பண்டிகை என்பதால் 139 விவசாயிகள் வந்திருந்தனர். நுகர்வோர் வரவும், கணிசமான அள வுக்கு குறைந்திருந்தது. கத் தரிக்காய் வரத்து 2.5 முதல் 3 டன் வரை இருப்பது, 1,800 கிலோவாக குறைந்து விட்டது. கத்தரி விலை கிலோவுக்கு இரண்டு ரூபாய் உயர்ந்துள்ளது. தக்காளி கிலோ 8 ரூபாய்; கத்தரிக்காய் 18; சின்ன வெங்காயம் 20; பெரிய வெங்காயம் 13; வெண்டை 16; புடலை 10; பீர்க்கன் 18; அவரை 20; பச்சை மிளகாய் (சம்பா) 20; கேரட் 30; பீன்ஸ் 30; உருளை 16; கோஸ் 18; காலிபிளவர் 16; மேரக்காய் 16. சுரைக்காய் 5; பாகல் 20; பூசணி 10; அரசாணி 10; முள்ளங்கி 10; கொத்தவரை 10; கீரை வகை 12; தேங்காய் 10; வாழைப்பழம் 20; கொய்யாப்பழம் 20; வாழைத்தண்டு 5; வாழைக்காய் 18 ரூபாய்க்கு விற்கிறது, என்றார். பூ விற்பனை நார்மல்: பூ வியாபாரிகள் சங்க செயலாளர் சக்திவேல் கூறுகையில், ""ஆடி பண்டிகையை முன்னிட்டு காலை நேரத் தில் அதிக விலையும், பின்னர் குறைந்தது. விற் பனை நார்மலாக இருந்தது. மல்லிகை கிலோ 120 முதல் 80 ரூபாய் வரை; முல்லை 100 முதல் 80 வரை; ஜாதிமுல்லை 200; சம்பங்கி 100 முதல் 60 வரை; பட்டுப்பூ 40 முதல் 30 வரை; அரளி 80; மாலை பெரியது 150; சிறியது 50 முதல் 40 வரை; கனகாம்பரம் வரத்து இல்லை," என்றார். பருப்பு விற்பனை சுறு சுறுப்பு: திருப்பூர் மார்க் கெட் வியாபாரிகள் சங்க தலைவர் பாலசுப்ரமணியம் கூறுகையில், ""பருப்பு விலையில் அதிகளவில் மாற்றமில்லை. அஸ்கா கிலோ 30 ரூபாய்; பாசிப்பருப்பு 80; பச்சை பயிறு 64; கருப்பு உளுந்து 68; வெள்ளை உளுந்து 80; துவரம் பருப்பு 60 முதல் 72 வரை; தட்டப்பயிறு 36; கொள்ளு 26; சுண்டல் கடலை 35 ரூபாய் என விற்கப்படுகிறது. பண்டிகை அதிகளவில் உள்ளதால், விற்பனை சூடுபிடித்துள்ளது," என்றார்.

**வெற்றிகர விவசாயம் பயோடெக் விவசாயமுறை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2010,00:00 IST

என் பெயர் கே.சண்முகநாதன், விவசாயி, மேலதவிட்டுப்பாளையம், காட்டுப்புத்தூர் அஞ்சல், தொட்டியம் தாலுகா, திருச்சி-621 207-ல் இருந்து எழுதுகிறேன்.

தற்போது விவசாயிகள் இயற்கை விவசாயத்திற்கு மாற விரும்பினாலும் ரசாயன விவசாயத்தில் கிடைக்கும் அதிக விளைச்சலும், பூச்சி, நோய் பிரச்னைகளுக்கு உடனடி தீர்வும் இயற்கை முறை விவசாயத்தில் கிடைப்பதில்லை என்பதே உண்மை. மேலும் இயற்கை முறை விவசாயத்தில் வேலை ஆள் தேவையும் உழைப்பும் அதிகம் என்பதும் மிக முக்கிய காரணமாகும்.

எனவே விவசாயிகள் ரசாயன முறையில் பெறும் விளைச்சலையும், பூச்சி நோய்களுக்கு உடனடி தீர்வையும், உயிரி தொழில்நுட்ப முறை விவசாயத்தில் வெற்றிகர ஆலோசனைகளையும்

அதற்கான இடுபொருட்களை நேரடியாக வியாபாரிகளின்றி விவசாயிகளுக்கே வழங்குகிறது என தினமலர் விவசாயமலர் மூலம் அறிந்து அந்நிறுவனத்தை தொடர்புகொண்டேன்.
வாழைக்கு ஆரம்பத்தில் தொழு உரத்திற்கு பதிலாக ஏக்கருக்கு 100 கிலோ பயோடைமண்ட் பயன்படுத்தினேன். தற்சமயம் நன்கு மக்கிய தொழு உரம் குறைந்த விலையில் கிடைக்காததால் பயோடைமண்ட் அதே விலையில் வாங்கி பயன்படுத்தலாம். இதனால் களை விதைகளையும், பூச்சிநோய் கிருமிகளையும் தவிர்த்துவிடலாம். மேலும் பயோடைமண்ட்-ன் சத்துக்கள் உடனடியாக கிடைத்துவிடுகிறது. ஏனெனில் பயிருக்கு தேவையான அனைத்து சத்துக்களும், ஹார்மோன்கள், என்சைம்கள், அமினோ கந்தகம், துத்தநாக சத்துக்களை மண்ணிலிருந்து பயிருக்கு அளிக்கும் நன்மை செய்யும் பாக்டீரியாக்களும் பயோடைமண்ட்-ல் உள்ளன. ஆனால் பயோடைமண்ட் அதிநவீன உயிரி தொழில்நுட்ப முறையில் தயாரிக்கப் படுவதால் ரசாயன உரத்துடன் கலந்து பயன் படுத்தும்போது பாக்டீரியாக்கள் அழிந்துவிடுவதில்லை என்பது பயோடைமண்ட்-ன் தனிச்சிறப்பு.
நாம் எப்போதெல்லாம் ரசாயன உரம் இடுவோமோ அப்போதெல்லாம் அதை பாதியாக குறைத்துக்கொண்டு அதனுடன் பயோடைமண்ட் 10 கிலோ ஒரு ஏக்கருக்கு என்ற அளவில் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு வாழையில் பயன்படுத்தியபோது ஒரு தார் வாழையில் குறைந்தபட்சம் 2 (அ) 3 சீப்புகள் அதிகமாக கிடைத்ததால் பெரிதும் மகிழ்ந்தேன். எனவே எடை கூடி நல்ல லாபம் கிடைத்தது. வருமானம் 30% கூடியது.
இவ்வாறு ஆலோசனைப்படி செய்வதால் சாகுபடி செலவு கூடாமலேயே அதிக விளைச்சல் நல்ல தரத்துடன் கிடைக்கிறது. நான் ஒரு வருடத்திற்கு மேலாக தொடர்ந்து பயன்படுத்தி வருவதைப் பார்த்த விவசாயிகள் காய்கறி, தென்னை, பழ சாகுபடி, பூ சாகுபடிக்கும் பயன்படுத்தி நல்ல பயன் பெறுகின்றனர்.

தொடர்புக்கு: **சவுதம் சென்டர், அவினாசி ரோடு, கோவை. 88075 46989, 94879 01515.**
**-கே.சத்தியபிரபா, 97501 20222, 94865 85997.**

**நெல்லில் ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2010,00:00 IST

**நவீன தொழில்நுட்பம்**
நூற்றுக்கும் மேற்பட்ட பூச்சி வகைகள் பல வளர்ச்சி பருவங்களில் பயிர்களைத் தாக்கி சேதம் விளைவிக்கின்றன. அவைகளில் சாறு உறிஞ்சும் பூச்சிகளான தத்துப்பூச்சி, புகையான், கடித்து உண்ணும் புழுக்களான இலைச்சுருட்டுப் புழு ஆகிய பூச்சிகள் நட்ட பயிரிலும்,பயிர் பூத்த

பின்னரும் முன்னரும் தாக்கி மகசூலை மிகவும் பாதிக்கச் செய்கின்றன. தமிழ்நாடு விவசாய பல்கலைக் கழகத்தில் நெல் சாகுபடியில் ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாக முறைகளைப் பயன்படுத்தி சுற்றுப்புற சூழ்நிலைகளை பாதிக்காமல் தொழில்நுட்ப விளக்கங்களைப் பின்பற்றி விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

நிலத்திற்கேற்ப 3 வருடத்தில் ஒருமுறை ஊழிக்கலப்பை கொண்டு நிலத்தை உழவு செய்தல். மண்ணின் அங்கக சத்தை பாதுகாக்க பசுந்தாள் அல்லது பயறுவகைகள் பயிர் சுழற்சி, நன்கு மக்கிய தொழு உரம் / ஊட்டமேற்றிய தொழு உரம், வேப்பம் புண்ணாக்கு எக்டருக்கு 250 கிலோ இடுதல் அவசியம்.

மண்ணின் கார அமிலத்தன்மை 7க்கு மேல் இருந்தால் சூடோமோனாஸ், கார அமிலத்தன்மை 7க்கு குறைவாக இருந்தால் டிரைகோடெர்மா விரிடி 2.5 கிலோ/எக்டர் + 25 கிலோ வேப்பம் புண்ணாக்கு மற்றும் 100 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் 10 நாட்களுக்கு மேல் வைத்திருந்து கடைசி உழவுக்கு பிறகு இடுதல் அவசியம்.

பூச்சி நோய் தாங்கி வளரக்கூடிய பயிர் ரகங்களை பயன்படுத்துதல் அவசியம். சுத்தமான ஆதார விதைகளைப் பயன்படுத்தவும். சூடோமோனாஸ் புளூரசன்சுடன் விதைநேர்த்தி செய்தல், வேர் நனைத்தல், நடவு வயலில் இடுதல், ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் மற்றும் ஒரு எக்டர் நடவு வயலுக்கு 2.5 கிலோ இடுதல்.

நாற்றங்காலில் சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த 5 சத வேப்பங்கொட்டை சாறு அல்லது 2 சத வேப்பெண்ணெய் அல்லது அசாடிராக்டின் 0.03 சதம் விதைத்த 7-10 நாட்களில் ஒட்டும் திரவமான காதி கோபுர சோப்பு 3 கிராம்/லிட்டர் என்ற அளவில் கலந்து இலைப்பேன்களையும் தத்துப்பூச்சிகளையும் கட்டுப்படுத்தலாம். சரியான இடைவெளியை கடைபிடித்து காற்றோட்டம் மற்றும் சூரிய வெளிச்சத்தினால் புகையான், குருத்து ஈ, தண்டு துளைப்பான், ஆனைக்கொம்பன் ஆகியவற்றின் தாக்குதலை குறைக்கலாம். 6 அடிக்கு 1 அடி பட்டம் விட்டு நடவு செய்வதன் மூலம் பூச்சி எண்ணிக்கையை குறைக்க முடியும். நீர்பாசனத்தில் பாய்ச்சலும் காய்ச்சலும் என்ற ரீதியில் நீர் மேலாண்மை மேற்கொள்வதால் புகையானின் தாக்குதல் 60-80 சதம் வரை குறைகிறது.

நட்ட 25ம் நாளிலிருந்து 1 வார இடைவெளியில் 3 முறை டிரைகோகிரம்மா ஜப்பானிக்கம், பிறகு 3 முறை அதாவது நட்ட 37, 44, 51 நாட்களில் டிரைகோகிரம்மா கைலோனிஸ் எக்டருக்கு ஒவ்வொரு முறையும் 5சிசி(1,00,000 ஒட்டுண்ணி) என்ற அளவில் வயல்களில் விடுதல் அவசியம்.

இலை சுருட்டுப்புழுவைக் கட்டுப்படுத்த 5 சதம் வேப்பங்கொட்டை கரைசலைப் பயன்படுத்த வேண்டும். நெல்லில் பூச்சிகள் அதிகளவில் தோன்றி பொருளாதார சேத நிலையைக் கடக்கும்போது மட்டும் பரிந்துரைப்படி பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்த வேண்டும். புகையான் அதிகரிக்கச் செய்யும் செயற்கை பைரித்ராய்டு மருந்துகளை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

**ஒருங்கிணைந்த எலி கட்டுப்பாடு:** சிறிய வரப்புகளை அமைத்தல் (45 து 30செ.மீ.), சிங்க் பாஸ்பைடு நச்சுணவை வைத்தல் (49:1), தஞ்சாவூர் எலிக்கிட்டிகளை வைத்தல் (ஒரு ஏக்கருக்கு

35-40 எண்ணிக்கைகள்), புரோமோடைரான் கேர் வைத்தல். (தகவல்:ச.முகமது ஜலாலுதீன், கோ.ரவி, த.ஜெயராஜ், தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை-612 101)
**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**நெல் சாகுபடியாளர்களின் கவனத்திற்கு...**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2010,00:00 IST

உங்கள் நெல் பயிர் கதிர்ப்பருவத்தில் உள்ளதா? பயிரில் கதிர் நாவாய்ப்பூச்சி நடமாட்டம் உள்ளதா என்று காலை நேரத்தில் கவனியுங்கள். குறிப்பாக, உங்கள் பயிர் மற்ற விவசாயிகளின் பயிருக்கு பிந்தி நட்ட பயிர் எனில் நன்கு கண்காணிக்க வேண்டும். கதிர் நாவாய்பூச்சிகள் நீண்டகாலங்கள் மற்றும் உணர் கொம்புகளுடன் காணப்படும். உடல் பழுப்பு நிறத்தில் சுமார் இரண்டு செ.மீ. நீளமானது. பூச்சியினைக் கையால் தொட்டால் துர்நாற்றம் வீசும். தீவிர தாக்குதல் உள்ள வயலிலும் துர்நாற்றம் வீசும். இதனைக் கட்டுப்படுத்த லிண்டேன் 1.3 சத தூள் அல்லது மாலத்தியான் ஐந்து சத தூளினை ஏக்கருக்கு பத்து கிலோ வீதம் அதிகாலை நேரத்தில் பனிப்பதத்தில் தூவ வேண்டும். தாக்குதல் அதிகமாக இருந்தால் மானோகுரோட்டோபாஸ் அல்லது மாலத்தியான் திரவ மருந்தினை ஏக்கருக்கு 200 மில்லி வீதம் மாலை நேரத்தில் தெளிக்க வேண்டும். தேவைப்பட்டால் ஒரு வாரம் கழித்து மீண்டும் தெளிக்க வேண்டும்.
மேலும் ஆங்காங்கே வெண்கதிர் தென்பட்டால் டீலக்ஸ் பொன்னி, செல்லப்பொன்னி மற்றும் பால் ஒட்டு பயிரிட்டுள்ளவர்கள் கதிரின் கழுத்துப் பாகத்தினையும் கவனியுங்கள். குலைநோய் தாக்கியிருந்தால் கதிரின் கழுத்துப்பாகம் பழுப்பு நிறமடைந்தும் கதிர் வெண்சாவியாகியும் காணப்படும். தற்போதுள்ள காலை குளிர் மற்றும் அதிக அளவு தழைச்சத்து உரங்கள் இடுதல் கதிர் குலைநோயை ஏற்படுத்தும். கதிர் குலைநோயை கட்டுப்படுத்த ஏக்கருக்கு டிரைசைக்ளோசோல் 75 தீணீ120 கிராம் வீதம் பயிர் முழுவதும் படும்படி தெளிக்க வேண்டும். மருந்துக் கரைசல் பயிரில் நன்கு படிவதற்காக, சாண்டோவிட், இண்ட்ரான், ஸ்டிக்கால், பைட்டோவிட், அக்ரோவிட் போன்ற திரவ சோப்புகளில் ஏதேனும் ஒன்றினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு கால் மில்லி வீதம் சேர்த்துக் கலக்கிக் கொள்ள வேண்டும்.
**பேராசிரியர் மற்றும் தலைவர், பருத்தி ஆராய்ச்சி நிலையம், ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**வெள்ளைப்பொன்னி சாகுபடி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2010,00:00 IST

தமிழகத்தில் பச்சரிசி தரும் ரகங்களில் வெள்ளைப் பொன்னியும் ஒரு சிறந்த நெல் ரகமாகும். இதன் அரிசி சன்னமாகவும் சமைப்பதற்கு ஏற்றதாகவும் உள்ளது. இந்த நெல்லுக்கு நல்ல விலை கிடைப்பதால் விவசாயிகளுக்கு சாகுபடியில் நல்ல லாபம் கிடைக்கும். இதன் சாகுபடி முறைகள் விவசாயிகள் நலனுக்காக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**சாகுபடி முறைகள்:** ஏக்கருக்கு 30 கிலோ விதை பயன்படுத்த வேண்டும். எட்டு சென்ட் பரப்பில் நாற்றங்கால் தயார் செய்து நாற்று நடவேண்டும். நாற்றங்காலுக்கு 8 சென்ட் பரப்பில் 16 கிலோ டி.ஏ.பி. உரம் இடப்படுகின்றது. இதோடு மக்கிய தொழு உரம் 8 சென்ட் பரப்பிற்கு 20 கூடை இடப்படுகின்றது. நாற்று செழிப்பாக வளரும். இலைப்பேன் தாக்குதல் வரும். இதற்கு தக்க பயிர் பாதுகாப்பு செய்து நாற்றின் நுனி இலை பாதிக்கப்படாமல் பாதுகாக்க வேண்டும்.

**நடவு வயல்**: விவசாயிகள் நடவு வயலுக்கு அதிக அளவு இயற்கை உரங்கள் இடுகிறார்கள். இதற்கு நான்கு டிராக்டர் டிரெய்லர் லோடு மக்கிய தொழு உரத்தை இடுகின்றனர். இதற்கு ரூ.2000 வரை செலவாகின்றது. இந்த செலவைக் குறைக்க வயலில் பசுந்தாள் உரச் செடியான தக்கைப்பூண்டினை நெருக்கமாக விதைத்து உழுதுவிட்டு சாகுபடி செய்யலாம். இம்மாதிரி இயற்கை உரம் இடுவதற்கு செலவு ரூ.400தான் ஆகும். வெள்ளைப் பொன்னிக்கு அவுரி விதைத்து உழுதுவிடுவதும் சிறந்தது. குறிப்பாக தக்கைப்பூண்டினை விட சிறந்தது. ஆனால் அவுரி பூமியில் 6 மாதங்கள் நிற்க வேண்டும். பின்தான் அதனை மடக்கி உழுது நாற்று நடலாம். அவுரியை உழுது செய்யும் சாகுபடியில் ரசாயன உரங்கள் இடுவதில் சேமிப்பு காண முடியும். அவுரியின் காரணத்தினால் களைச்செடிகள் வீரியமாக வராது. அதனால் களைச்செலவு மிகவும் குறைவு. மேலும் பயிர் பாதுகாப்பு செலவும் குறைவு. மொத்த சாகுபடி செலவில் ரூ.2000 வரை குறையும். ஆனால் அவுரியை இரு போக நஞ்சை நிலங்களில் விதைத்து உழ முடியாது. ஒரு போக நஞ்சை நிலங்களில் உபயோகிக்கலாம். வெள்ளைப்பொன்னி பொதுவாக இரு போக நஞ்சை நிலங்களில் சாகுபடி செய்வதால் தக்கைப் பூண்டினை இயற்கை உரமாக உபயோகிக்கலாம்.

வெள்ளைப்பொன்னி சாகுபடிக்கு இயற்கை உரங்களோடு ரசாயன உரங்களையும் இட்டால்தான் ஏக்கரில் 20 மூடைகளுக்கு அதிகமாக மகசூல் கொடுக்கும். இதனால் வயலுக்கு அடியுரமாக டி.ஏ.பி. யூரியா மற்றும் பொட்டாஷ் (டி.ஏ.பி., அரை மூடை, பொட்டாஷ் அரை மூடை, யூரியா 5 கிலோ) இவைகளை இடவேண்டும். நடவு வயலில் சரியாக அண்டை வெட்டி வெகு சீராக பரம்படித்து நிலத்தை சமன்செய்ய வேண்டும்.

சமன்செய்த நிலத்தில் ஏக்கரில் 12 கிலோ ஜிங்க் சல்பேட்டினை தேவையான ஆற்று மணலுடன் கலந்து வயலின் மேல் (1 ஏக்கர் பரப்பு) சீராகத் தூவ வேண்டும். நாற்றினை வேர் அறுகாமல்

பறித்து வந்து நடவு வயலில் வரிசை நடவு போடவேண்டும். வரிசைக்கு வரிசை 9 அங்குலமும், வரிசையில் குத்துக்கு குத்து 9 அங்குலமும் இடைவெளி விட்டு 30 நாட்கள் நாற்றினை குத்துக்கு இரண்டு நாற்றுகள் வீதம் நடவேண்டுமெ. அதிக இடைவெளி கொடுத்து நடும்போது பயிர் ஓரளவிற்கு கீழே சாயாமல் நின்று வளர்ந்து நல்ல மகசூல் தரும். நட்ட பயிருக்கு இரண்டு முறைகள் களையெடுக்கவேண்டும். நடவு நட்ட 25 நாட்கள் பிறகு மேலுரமாக யூரியா 15 கிலோ, பொட்டாஷ் 15 கிலோ, வேப்பம் பிண்ணாக்கு 3 கிலோ இடவேண்டும். சாகுபடி சமயம் வரக்கூடிய பூச்சிகள் பூஞ்சாள நோய்களைத் தடுக்க வேண்டும். (செலவு ரூ.150) பயிரினை நன்கு கண்காணிப்பு செய்து லாபம் எடுக்க வேண்டும்.

**-எஸ்.எஸ்.நாகராஜன்**

## ***விலைவாசி உயர்வு குறித்து பாராளுமன்றத்தில் விவாதம் ஆழ்ந்த உறக்கத்தில் மத்திய அரசு இருப்பதாக எதிர்க்கட்சிகள் புகார்***

*புதுடெல்லி, ஆக.4–*

*விலைவாசி உயர்வு குறித்து பாராளுமன்றத்தில் நேற்று விவாதம் தொடங்கியது. விலைவாசியை கட்டுப்படுத்தாமல் மத்திய அரசு ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதாக எதிர்க்கட்சி தலைவர்கள் குற்றஞ்சாட்டினர்.*

*பாராளுமன்றத்தில் விவாதம்*

*நாடு முழுவதும் அத்தியாவசியப் பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்து வருகிறது. இது குறித்து பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தி தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என அனைத்து எதிர்க்கட்சிகளும் கூட்டாக வலியுறுத்தின. இந்த பிரச்சினையில், பா.ஜனதா, இடதுசாரிகள் உட்பட அனைத்து கட்சிகளும் ஓரணியில் திரண்டதால் மத்திய அரசு அதிர்ச்சி அடைந்தது.*

*தீர்மானம் மீது ஓட்டெடுப்பு நடத்த தயங்கியது. இதனால், கடந்த வாரம் முழுவதும் பாராளுமன்றம் முடங்கியது. இதைத்தொடர்ந்து, மத்திய அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தையில், விலைவாசிக்கு கவலை தெரிவித்தும் மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டது.*

*அதன்படி, பாராளுமன்றத்தில் நேற்று விவாதம் தொடங்கியது. அரசை கண்டிக்கும் தீர்மானத்தை கொண்டு வந்து விவாதத்தை தொடங்கிய எதிர்க்கட்சி தலைவரும், பா.ஜனதா மூத்த தலைவருமான சுஷ்மா சுவராஜ் பேசியதாவது:–*

*எண்ணெய் நிறுவனங்கள் லாபம்*

*முதுகெலும்பை முறிக்கும் விதத்தில் உள்ள விலைவாசி உயர்வால் சாதாரண மக்கள்*

பரிதவிக்கின்றனர். எனவே, ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தும் உணர்ச்சியற்ற நிலையில் இருந்தும் மத்திய அரசு விடுபட வேண்டும். உடனடியாக, நடவடிக்கைகளை தொடங்க வேண்டும். மக்கள் மத்தியில் அரசுக்கு செல்வாக்கு குறைந்தால், நாங்கள் பயன் அடைவோம். ஆனால், அது வர்த்தகர்களின் மொழி. நாங்கள் வணிகர்கள் அல்ல. மக்களின் நலன்களை பாதுகாக்கும் காவலர்கள். ஏழை மக்களை தொடர்ந்து நசுக்காதீர்கள்.

பா.ஜனதா கூட்டணி ஆட்சியில் இருந்தபோது பெட்ரோலியப்பொருட்களின் விலை குறித்து கெல்கார் கமிட்டி மட்டுமே அமைக்கப்பட்டது. ஆனால், இந்த ஆட்சியில் ரங்கராஜன், சதுர்வேதி, பாரிக் என மூன்று கமிட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. பெட்ரோல், டீசல், மண்எண்ணெய், சமையல் கியாஸ் விலையை உயர்த்துவதற்காக, பொதுத்துறை நிறுவனங்கள் ரூ.53 ஆயிரம் கோடி இழப்பை சந்திப்பதாக தொடர்ந்து கூறப்படுகிறது. ஆனால், அவற்றின் வருடாந்திர அறிக்கைகளை பார்த்தால் நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் அளவுக்கு நிகர லாபம் அடைந்திருப்பதாக காட்டுகின்றன.

சோனியாவுக்கு கண்டனம்

பெட்ரோலியப்பொருட்களின் விலை உயர்வை நியாயப்படுத்தி காங்கிரஸ் கட்சி பத்திரிகையில் அதன் தலைவர் சோனியா எழுதுகிறார். 2008-ம் ஆண்டில் கச்சா எண்ணெய் விலை 135 டாலராக இருந்தபோது கூட, இதே காங்கிரஸ் கூட்டணி அரசு விலையை உயர்த்தவில்லை. ஏனென்றால், தேர்தலுக்கு முந்தைய வருடம் அது. ஆனால், தற்போது 74 டாலராக விற்கும் நிலையில் விலை உயர்த்தப்பட்டு இருக்கிறது. உலகில் வேறு எந்த நாடுகளையும் விட, இந்தியாவில் தான் பெட்ரோலியப்பொருட்களுக்கு அதிக அளவில் வரிகள் விதிக்கப்படுகின்றன. விலை உயர்வுக்கு முன்பாக அரசின் வரி வருவாய் ரூ.84 ஆயிரம் கோடியாக இருந்தது. விலை உயர்வுக்கு பிறகு ஒரு லட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. இவ்வாறு சுஷ்மா சுவராஜ் கூறினார்.

நிதி மந்திரி குறுக்கீடு

சுஷ்மா சுவராஜ் பேசும்போது, நிதி மந்திரி பிரணாப் முகர்ஜி குறுக்கிட்டு தவறான தகவல்களை சுஷ்மா சுவராஜ் தெரிவிப்பதாக கூறினார். அதற்கு பதிலளித்த சுஷ்மா சுவராஜ், 'பாராளுமன்றத்தில் பெட்ரோலியத்துறை மந்திரி கூறிய கருத்துகளையே நான் தெரிவிக்கிறேன். அரசின் நலத்திட்டங்களுக்கு தேவையான பணத்தை பெறுவதற்காகவே பெட்ரோல், டீசல், சமையல் கியாஸ் விலையை உயர்த்துவதாக பெட்ரோலிய மந்திரி கூறினார்' என்றார்.

சுவிஸ் வங்கி பணம்

சமாஜ்வாடி கட்சி தலைவர் முலாயம்சிங் பேசுகையில், "நாட்டின் 90 சதவீத மக்கள் விலைவாசி உயர்வால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், காமன்வெல்த் விளையாட்டு போட்டிகளுக்காக கோடிக்கணக்கான ரூபாய் வீணாக செலவிடப்படுகிறது. அதிலும் ஊழல் நடைபெறுகிறது. பெட்ரோலிய பொருட்களின் விலையை உயர்த்துவதற்கு பதிலாக, உங்களுக்கு தைரியம் இருந்தால் சுவிஸ் வங்கியில் உள்ள கருப்பு பணத்தை மீட்டுக் கொண்டு வரலாமே" என்றார்.

பகுஜன் சமாஜ் கட்சியை சேர்ந்த பாலிராம் பேசும்போது, "அன்றாடம் தேவையான அத்தியாவசிய பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்து வருகிறது. மத்திய அரசின்

ஏழைகள் விரோத போக்கால் மக்கள் கடுமையாக வேதனையடைந்துள்ளனர். விலைவாசி உயர்வு குறித்து எண்ணற்ற விவாதங்கள் நடைபெற்றுள்ளன. அப்போது, பாராளுமன்றத்தில் அளித்த உறுதிமொழிகளை மத்திய அரசு நிறைவேற்ற தவறி விட்டது” என்றார்.

மக்களைப்பற்றி அக்கறையில்லை

மார்க்சிஸ்ட் மூத்த தலைவர் சீதாராம் யெச்சூரி பேசுகையில், “ஆட்சிக்கு வரும்போது, ‘சாதாரண மக்கள்’ பற்றிய கோஷத்தை இந்த அரசு திரும்பத்திரும்ப கூறியது. தற்போது, அந்த மக்களைப்பற்றி கொஞ்சம் கூட அக்கறை கொள்ளவில்லை. தன்னுடைய கொள்கைகள் தோல்வியடைந்து இருப்பதை மத்திய அரசே ஒப்புக் கொண்டுள்ளது. மத்திய அரசை கட்டுப்படுத்தும் வகையில் எதிர்க்கட்சி தலைவர் கொண்டு வந்த தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்ற முன் வந்து இருப்பது, இந்திய பாராளுமன்ற வரலாற்றில் முன் எப்போதும் கிடைக்காத வெற்றியாகும். பொருளாதார பிரச்சினைக்காக இப்படி ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றுவதும் இதுவே முதல் முறை” என்றார்.

ஐக்கிய ஜனதா தளம் தலைவர் சரத்யாதவ் கூறும்போது, “பணவீக்கம் மற்றும் விலைவாசி உயர்வு பிரச்சினையில் மத்திய அரசில் அங்கம் வகிக்கும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி இரண்டு மனதாக செயல்படுகிறது. எதிர்க்கட்சியாக இருப்பதா? ஆளும் தரப்பில் இருப்பதா? என ஊசலாடுகிறது” என்றார்.

கூட்டணி கட்சிகள்

இதற்கு பதிலளிக்கும் விதத்தில் பேசிய திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி. பந்தியோபாத்யாயா, “ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் திரிணாமுல் காங்கிரஸ் இருக்கிறது. எனினும், சாதாரண மனிதனை பாதிக்கும் கடுமையான விஷயங்களை தீவிரமாக எழுப்புவது எங்கள் கட்சியின் வழக்கம். பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான அரசுக்கு உறுதியான ஆதரவை தெரிவிக்கிறோம்” என்றார்.

மத்திய அரசில் அங்கம் வகிக்கும் மற்றொரு கட்சியான தி.மு.க. சார்பில் பேசிய டி.ஆர்.பாலு, “பெட்ரோலியப்பொருட்களின் விலையை மத்திய அரசு உயர்த்தியதில் எந்தவித தவறும் இல்லை. சர்வதேச சந்தையின் நெருக்கடி காரணமாகவே, அந்த முடிவு எடுக்கப்பட்டது. எனினும், உணவுப்பொருள் பற்றாக்குறை ஏற்படப்போவதை சரியான நேரத்தில் மத்திய அரசு கண்டறிந்து இருக்கலாம்” என்றார்.